மாலை பதிப்பு

# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

31.07.2022 ஞாயிற்றுக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# கடன் வாங்கி கடனடைக்கும் கோட்டாவின் பொருளாதாரக் கொள்கையே நாடு சீரழியக் காரணம்

காரைதீவில் சுமந்திரன் எம்.பி காட்டம்

[ காரைதீவு நிருபர் சகா]



இன்று நாடு மிக மோசமான நிலைமைக்கு சென்று இருக்கின்றது. இதற்கு அடிப்படை காரணம் கடன் வாங்கி கடன் அடைக்கும் கோட்டாவின் பொருளாதார கொள்கையே. இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணிமான யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் காரைதீவில் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட தமிழ் அரசு கட்சி உறுப்பினர்களுக்கான சமகால பொருளாதார நெருக்கடி அரசியல் நிலைமை தொடர்பாக விளக்கம் அளிக்கும் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை காரைதீவு விபுலானந்த கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில்

02 ஆம் பக்கத்தில்...

## 22வது திருத்தத்தின் புதிய வரைவு நாளை அமைச்சரவைக்கு

அரசாங்கத்தின் உத்தேச அரசியலமைப்பின் 22வது திருத்தத்தின் புதிய வரைவு சட்டமூலம் நாளை ஆகஸ்ட் 1அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என அரசாங்கத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. நீதி அமைச்சு கடந்த வாரம் புதிய வரைவு மசோதாவை அமைச்சரவை செயலாளருக்கு அனுப்பி, திங்கள்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் விவாதித்து முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. 22ஆவது திருத்தச் சட்டமூலம் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படும் என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அமைச்சரின் கூற்றுப்படி, புதிய வரைவு மசோதா அரசியலமைப்பின் 19 வது திருத்தத்தை பிரதிபலிக்கும், மேலும் புதிய

02 ஆம் பக்கத்தில்...

## நாட்டில் தற்போது சட்டமும் இல்லை, சட்டத்திற்கு இடமும் இல்லை

பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித்

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்கள் இன்னும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், காவல்துறையில் பதவிகளை வகித்து வருவதாகவும் கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் தெரிவித்துள்ளார். புனித சாண்டியாகோ பெரிய தேவாலயத்தின் 150வது

02 ஆம் பக்கத்தில்...

## மற்றுமொரு கொவிட் அலையை எதிர்கொள்ளும் நிலையில் நாடு இல்லை

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



மற்றுமொரு கொவிட் அலையை தடுப்பதற்கு ஆகக்கூடிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முதலாம் இரண்டாம் கொவிட் அலையை எதிர்கொண்டது போல இன்னொரு அலையை எதிர்கொள்வதற்கான பலம் எம்மிடம் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுசெயலாளர் ஹரித அளுத்கே இதனை தெரிவித்துள்ளார். எதிர்வரும் காலத்தில் நாட்டை முடக்குவது சாத்தியமில்லை,ஆகவே புதிய அலை உருவாவதை தடுப்பதற்கு பொறுப்புள்ள அதிகாரிகள் பலனளிக்ககூடிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். நாளாந்தம் அறிவிக்கப்படும் எண்ணிக்கைக்கு அப்பால் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை

02 ஆம் பக்கத்தில்...

## வாகன இலக்க தகட்டின் கடைசி இலக்க ஒழுங்கு நாளை முதல் செல்லுபடியாகாது கியு.ஆர்.கோட் மாத்திரம் நடைமுறைக்கு

வாகன இலக்க தகட்டின் கடைசி இலக்கம் மற்றும் டோக்கன் முறை போன்றவை ஓகஸ்ட் 1ஆம் திகதி முதல் செல்லுபடியாகாது என்றும் அன்றையதினம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தேவையற்ற நெரிசல் ஏற்படக்கூடிய வகையில் ஒன்று கூட வேண்டாம் என்றும் வலுச்சக்தி அமைச்சு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அன்றைய தினம் முதல் தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திர கியூஆர் முறைமை அமுல்படுத்தப்படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. அமைச்சு இன்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது, சட்ட விரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்திருப்பவர்கள் தொடர்பான ஆதாரங்கள் மற்றும் தகவல்களை 0742123123 என்ற வட்சப் எண்ணுக்கு அனுப்பலாம் என்றும் அவர்கள் சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்டால், அவர்களின் கியூஆர் குறியீடு செல்லுபடி அற்றதாக்கப்படும்

02 ஆம் பக்கத்தில்...

## முகக்கவசம் அணியாவிட்டால் நாளைமுதல் எரிபொருள் இல்லை

முகக்கவசம் அணியாமல் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வரும் மக்களுக்கு நாளை முதல் எரிபொருள் வழங்கப்பட மாட்டாது என பெற்றோலிய பிரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இன்று அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அறிவிக்கப்படும் என அதன் இணைச் செயலாளர் கபில நாவுதுன்ன தெரிவித்தார். நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் அதிகரித்துள்ள நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் செல்லும் போது சுகாதார பழக்கவழக்கங்கள் குறித்து அவதானம் செலுத்துமாறும் அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஜனாதிபதி நிதியத்தில் ஒரு சதம் கூட ஆதரவற்ற நோயாளிகளுக்கு வழங்கப்படவில்லை

ஜனாதிபதி நிதியத்தில் நான்கு பில்லியன் ரூபா மீதி உள்ள போதிலும், கடந்த இரண்டு வருடங்களில் அதன் மூலம் எவரும் பயனடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மிகவும் வறியவர்களுக்குஅவசர சத்திரசிகிச்சைகளுக்கு மானியங்களை வழங்க ஜனாதிபதியின் ஜனாதிபதி நிதி பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறான சுமார் ஏழாயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற போதிலும், கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து எவருக்கும் நன்மைகள் வழங்கப்படவில்லை என கொழும்பு நாளிதழ் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. அரச நிவாரணம் தேவைப்படுபவர்களுக்கு வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியத்தை மீண்டும் பயன்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி நிதியில் இருந்து நிவாரணம் கோரும் நபர்கள் இணையம் மூலம் விண்ணப்பிக்கும் வசதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரவுநேரக் கடமையில் வைத்தியர்கள் இல்லை நோயாளர்கள் அவதி

பைஷல் இஸ்மாயில்

கல்முனை பிராந்திய, அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் இரவுநேரக் கடமை வைத்தியர்கள் வைத்திசாலையில் இல்லாமல் வீடுகளில் உறங்குவதாக நோயாளிகளும், பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றர். நேற்றிரவு (30) 11:50 மணியளவில் கண்ணில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ளச் சென்றுள்ளனர். அங்கு, இரவுநேரக் கடமை வைத்தியர் வைத்தியசாலையில் இல்லாமல் தனது வீட்டில் உறங்குவதாக கடமையிலிருந்த தாதிய உத்தியோகத்தரும், சுகாதார உதவியாளரும் சிகிச்சை பெற்றுக்கொள்ள வந்தவர்களிடம் தெரிவித்துள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையில் விபச்சாரத் தொழில் 30 சதவீதத்தால் அதிகரிப்பு?

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையில், பெண்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும், வாழ்வாதாரத்திற்காக அவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக 22 மில்லியன் மக்கள் பாரிய கஷ்டங்களையும் வறுமையையும் எதிர்கொள்வதாக இந்திய செய்தி நிறுவனமான யுஜே சுட்டிக்காட்டியுள்ளது. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அன்றாடப் போராட்டத்தினால் பல இலங்கையர்கள் வீட்டில் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், பெரும்பாலான பெண்கள் ஆடைத் துறையில் வேலை இழந்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த ஆபத்தான நிலையைக் கருத்தில் கொண்டு தற்காலிக விபச்சார விடுதிகள் உருவாக்கப்பட்டு, பெண்கள் பாலியல் தொழிலாளிகளாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளதாக பாலியல் உரிமைகளுக்காக செயற்படும் குழுவான ளுவயனெரி ஆழளநஅநவெ இலங்கை, இந்திய செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## 22வது திருத்தத்தின் வரைவு..

வரைவு மசோதாவில் பாராளுமன்றம் மற்றும் லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான பொறிமுறைகளுக்கு அதிகாரம் அளிக்கும் பல அம்சங்களை உள்ளடக்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

### மற்றுமொரு கொவிட்....

குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது குறைந்தளவு சோதனை வசதிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளின் போதே நாளாந்தம் 150 நோயாளர்கள் இனம் காணப்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். கொவிட் வைரசினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் பலமடங்கு அதிகரித்துள்ளது எனவும் ஹரித அளுத்கே குறிப்பிட்டுள்ளார். புதிய கொவிட் மாறுபாடே பரவிவருகின்றது பாதிக்கப்பட்ட ஒருவர் மூலம் சுமார் 12 பேருக்கு பரவக்கூடிய தன்மை வாய்ந்தது இந்த புதிய மாறுபாடு எனவும் அவர் தெரிவித்துள்ளார். சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட மற்றும் ஏனைய டெல்டா மாறுபாடுகளை விட இதன் பரவும் தன்மை அதிகம் என தெரிவித்துள்ள அளுத்கே புதிய தகவல்களின் படி நோயாளர்களின் எண்ணிக்கைக்கு சமாந்திரமாக உயிரிழப்பும் அதிகரிக்கலாம் எனதெரியவருகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

### இலங்கையில் விபச்சாரத் தொழில் 30 சதவீதத்தால் அதிகரிப்பு?...

கடந்த மாதத்தில் இலங்கையில் விபச்சாரத்தில் 30 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த குழு சுட்டிக்காட்டியுள்ளது. பொருளாதார நெருக்கடி காரணமாக பெண்கள் வேலையிழந்துள்ள நிலையில், ஸ்பாக்கள் மற்றும் ஆரோக்கிய மையங்களில் வேலை செய்து பாலியல் தொழிலாளிகளாக வருமானம் ஈட்டுவதாக இது தொடர்பான செய்தி சேவை மேலும் தெரிவித்துள்ளது.

## கடன் வாங்கி கடனடைக்கும் கோட்டாவின்..

தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மற்றும் பல உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். அங்கு சுமந்திரன் மேலும் பேசுகையில்.. இன்று நாடு அல்லோலகல்லோலப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதற்கு அடிப்படை காரணம் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது போர் நடத்துவதற்கு முன்யோசனை இன்றி கண்மண் தெரியாமல் கடனை வாங்கியது தான் முதல் காரணம். அந்த கடனை அடைப்பதற்கு மேலும் கடன் வாங்கி அதனை அடைக்க முடியாமல் திணறியது. கடந்த வரவு செலவு திட்டத்தில் 74 வீத செலவினமானது கடனை அடைப்பதற்கானதாகும். கோட்டாவின் பொருளாதார கொள்கையானது கடன் வாங்கி கடனை அடைத்து விவதாகும். 2019 ஜனாதிபதி தேர்தலின் போது கோட்டா வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலே மக்களின் வரி வசூல் சம்பந்தமாக வரிச்சலுகை கொடுப்போம் என்றார். இதனை அப்போது இருந்த நிதியமைச்சர் மங்கல சமரவீர உடனடியாக பகிரங்கமாக எதிர்த்தார். பத்திரிகை மாநாடு நடாத்தி இந்த விஞ்ஞானம் நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கையானது லெபனான் வெனிசுலா போல மாறும் என்றார். அதேபோல கிரீஸ் நாட்டின் பாரிய பொருளாதாரம் நெருக்கடி இலங்கைக்கு ஏற்படும் என்றும் அன்றே எச்சரித்தார்.

ஆனால் 2019 டிசம்பரில் ஜனாதிபதி கோட்டா சகல முன்மொழிவுகளையும் நடைமுறைப்படுத்தினார் .அதன் விளைவு 25 வீத வரவு இல்லாமல் போனது .வெளிநாட்டின் நிதி உதவிகள் தடைப்பட்டன. இந்நிலையில் ரிசர்வேஷனில் இருந்த தங்கம் மற்றும் டாலர்களை விற்றார்கள். அதுமட்டுமல்ல உள்ளூர் உற்பத்தியை பாதிக்கும் வண்ணம் உரப்பாவனைக்கு தடை விதித்தார்கள் ஏப்ரல் மாதத்திலே நாடு வங்குரோத்து நிலைக்கு வந்தது. மக்கள் கோட்டா வீட்டுக்கு போ என்று மூன்று மாத போராட்டத்தில் ஈடுபட்டார்கள். விளைவாக என்ன நடந்தது என்பதை அறிவீர்கள் .

பாராளுமன்ற த்தில் இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் பொழுது நாங்கள் அனைவரும் சேர்ந்து டளஸ் ஐ ஆதரவளிப்பதற்காக தீர்மானித்தோம். தலைவர் சம்பந்தர் ஐயா சொன்னார் நாட்டு மக்கள் ராஜபக்சவை அருவருக்கத்தக்க முறையில் வெறுக்கிறார்கள். ஆகவே அந்த ராஜபக்ஷ வின் முகவராகிய ரணிலை ஆதரிக்க கூடாது .அடுத்து நாங்கள் நிச்சயம் யாருக்காவது ஒருவருக்கு ஆதரவளிக்க வேண்டும். அது டலசாக இருக்கட்டும் என்று. 10 பேரும் ஒன்றாக இணைந்து ஏகமனதாக தீர்மானித்தோம். அதன் படி வாக்களித்தோம்.

நான் நினைக்கிறேன்அனைவரும் டளசுக்கு தான் வாக்களித்ததாக. ஆனால் மறுநாள் செய்திகள் எல்லாம் சற்று மாறுபட்டு வந்தது. சிலர் ரணிலை ஆதரித்ததாக.. உண்மையில் பணம் பெற்று யாராவது ரணகலுக்கு வாக்களித்து இருந்தால் அது கட்சிக்கும் மக்களுக்கும் இழைக்கின்ற பாரிய துரோகமாக அது அமையும் என்பதில் மாறுபட்ட கருத்து இடமில்லை. இன்று ஜனாதிபதி மாளிகையில் பொதுச் சொத்துக்கு சேதம் ஏற்பட்டதாக பலர் கைது செய்யப்படுகிறார்கள்.

ஜனாதிபதி வைத்திருந்த 17.8 மில்லியன் ரூபா பணத்தை பகிரங்கமாக எண்ணி போலீஸ ிடம் ஒப்படைத்தவரை கைது செய்கிறார்கள். இந்த காசை வைத்திருந்தவரை விட்டு விடுகிறார்கள்.

அங்கு இருந்த நீர் தடாகத்திலே சோப் போட்டு குளித்தவரை தேடிக் கொண்டிருக்கின்றார்கள் .இதுவா இன்றைய பிரச்சனை ? மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஆட்சி தான் இன்றும் இருக்கின்றது . தொடர்கிறது.அதே தலைமை அதே பிரதமர் அதே அமைச்சரவை. ஆகவே நிதானமாக யோசிக்கின்றோம். இந்த இடத்திலே தமிழ் மக்களாகிய நாங்கள் ஒற்றுமையுடன் தொடர்ச்சியாக செயல்பட வேண்டும் நன்றி என்றார். உறுப்பினர்களின் கேள்விகளுக்கு சுமந்திரன் பதிலளித்தார்.

## வாகன இலக்க தகட்டின் கடைசி இலக்க...


என்றும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. சேஸ் எண்ணின் மூலம் கியூஆர் முறைமைக்கு பதிவு செய்ய முடியாத வாகனங்கள் வாகன ஆண்டு வருமான அனுமதிப்பத்திர இலக்கத்தைக் கொண்டு பதிவு செய்ய அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து ஓட்டோக்களும் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து, அவற்றுக்கு ஒதுக்கப்படும் அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் விவரங்களை வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் தேவைப்படும் உபகரணங்களின் உரிமையாளர்கள் தங்களது பிரதேச செயலகத்தில் எரிபொருளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட நிரப்பு நிலையத்தில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும் அதே வேளையில், பஸ்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு, அவற்றின் வழித்தட அனுமதி மற்றும் பயணித்த கிலோமீற்றர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது. பாடசாலை போக்குவரத்து சேவைகள், ஊழியர் போக்குவரத்து, கைத்தொழில்கள், சுற்றுலா தொடர்பான வாகனங்கள், அம்பியூலன்ஸ்கள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட சேவைகளுக்கு தேவையான அனைத்து எரிபொருளையும் போக்குவரத்து சபை டிப்போ வழங்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், அம்பியூலன்ஸ்களுக்கு முன்னுரிமை அளிக்கவும், அவற்றுக்கு வரையறையற்ற எரிபொருள் வழங்கவும் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

### நாட்டில் தற்போது சட்டமும் இல்லை, சட்டத்திற்கு இடமும் இல்லை

யூபிலியை முன்னிட்டு இன்று (31) நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்நாட்டில் தற்போது சட்டமும் இல்லை, சட்டத்திற்கு இடமும் இல்லை எனவும், நாட்டில் அராஜகம் இருப்பதாகவும் கூறிய பேராயர், இந்த விடயத்தில் நாடு உலக நாடுகள் முன் வெட்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். சக்தி வாய்ந்தவர்களின் சட்டம் நாட்டில் உள்ளது என்று கூறியுள்ள கர்தினால்கள், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தி குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்களை தண்டிக்க வேண்டும் என்று எத்தனையோ கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும், நாட்டின் சட்டம் எதுவும் செய்யவில்லை. பதவிக்கும் செல்வத்துக்கும் பேராசை கொண்டவர்களால் நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்து அழிந்துவிட்டதாகக் குறிப்பிட்ட பேராயர், சில சமயங்களில் நமது முட்டாள்தனத்தால் தான் என்று மக்கள் நினைத்துக் கொள்வார்கள் எனவும் தெரிவித்தார்.

## இரவுநேரக் கடமையில் வைத்தியர்கள் இல்லை

சிகிச்சை பெறவந்த நோயாளியை வேறு வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இரவு நேரத்தில் ஏதாவது அவசர தேவை ஏற்பட்டால் எனது அலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்துங்கள் என்று கூறிவிட்டு குறித்த வைத்தியர் வீடு சென்றதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். நோயாளிகளுக்கு அவசரமாக சிகிச்சை வழங்க வேண்டும் என்பதற்காகவே அவசர சிகிச்சைப் பிரிவு உருவாக்கப்பட்டு அதற்கென வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களும் சுழற்சி முறையில் 24 மணிநேரக்கடமையில் அமர்த்தப்பட்டு அவை இயங்கி வருகின்றன. வைத்தியர்களும், ஊழியர்களும் இரவுநேரக் கடமையின்போது வீட்டில் உறங்குவதாக இருந்தால் அவர்களுக்கு எதற்காக இந்தக் கடமை வழங்கவேண்டும்? அவ்வாறு வீட்டில் உறங்குகின்றவர்களால் நோயாளிகளுக்கு எவ்வாறு அவசர சிகிச்சைகளை வழங்க முடியும்? இது சாத்தியமாகுமா? அவர்கள் வீட்டிலிருந்து வருவதற்குள் நோயாளியின் நிலை என்னவாகும்? என்ற கேள்விகளை பொதுமக்கள் கேட்கின்றனர். கடந்த காலங்களில் இருந்த பணிப்பாளர்களின் காலங்களில் இவ்வாறான சம்பங்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டு வந்ததாகவும், குறிப்பாக, தற்போது மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய பணிப்பாளராக இருக்கின்ற வைத்தியர் குணசிங்கம் சுகுணனின் காலப்பகுதில் கல்முனைப்பிராந்தியத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகள் உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலைகள், நிறுவனங்கள் போன்றவற்றின் செயற்பாடுகள் மிகச் சிறப்பாகவும், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என்ற பாகுபாடின்றியும், குறை நிறை காணப்படுமிடத்து அவை உடனுக்குடன் நிவர்த்தி செய்து கொடுக்கும் பணிப்பாளராகவே காணப்பட்டு வந்தார் என்று நோயாளிகளும், பொதுமக்களும், வைத்தியர்களும், உத்தியோகத்தர்களும், சுகாதார உழியர்களும் இன்றுவரை அவரின் செயற்பாடுகளை பாராட்டி புகழ்பாடி வருகின்றனர். ஆனால், தற்போதுள்ள கல்முனை பிராந்திய பணிப்பாளர் இதைக் கண்டும் காணாதவர் போன்று செயற்பட்டு வருவதாகவும், வைத்தியர்கள், உத்தியோகத்தர் மற்றும் ஊழியர் என்ற பாகுபாட்டுடன் நடந்து வருவதாக சுகாதார ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். அதுமாத்திரமன்றி வைத்தியர்கள் தவறு செய்தால் அவர்களை கண்டுகொள்ளாமலும், ஊழியர்கள் தவறு செய்தால் அதற்கு உடனடி நடவடிக்கையை மனச்சாட்சிக்கு விரோதமாக எடுத்துவருவதாகவும் சுகாதார ஊழியர்கள் விசனத்துடன் கவலையைத் தெரிவிக்கின்றனர். கல்முனை பிராந்தியத்தில் தொடராக இடம்பெற்றுவரும் இவ்வாறான அவலநிலைக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியில்லை என்றால் எங்களது பிராந்தியத்திற்கு சிறந்த பணிப்பாரை நியமிக்கக் கோரிய ஆர்ப்பாட்டத்தை மிக விரைவில் மேற்கொள்வோம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம் என்று பொதுமக்கள் விசனத்துடன் தெரிவிக்கின்றனர்.



"தேனாட்டில் கதிர்காமம் என புகழ்ந்து கூறும்
தாந்தாமலை சென்று சண்முகனை வழிபட்டால்
அல்லல்போம், தொல்வினைபோம் ஆன
செல்வமத்தனையும் இன்பமுடன் பெற்று இனிது வாழ்வாரே"
அனைத்து விதமான ஆலய வெண்கலப்பொருட்கள், வீட்டுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்
குணா மல்ரி சொப் மற்றும் உமா பென்சி ஹவுஸ்
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை



# தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய

# வருடாந்த மகோற்சவப் பெருவிழா -2022

## திருக்கொடியேற்றம்
## 22.07.2022 வெள்ளிக்கிழமை

## தீர்த்தோற்சவம்
## 12.08.2022 வெள்ளிக்கிழமை

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஒரு எல்லையிலும் அம்பாரை மாவட்டத்திற்கு அயலிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து 10மைல் கல் தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாறு தொன்மை வாய்ந்தது. இவ்வாலயத்தின் வரலாறு கூத்திகன் – சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக்கோட்டன், ஆகியோருடன் தொடர்பு பட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரைகதைகளும் சான்று பகிர்கின்றது. ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரவழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரைகதைகளூடாக அறியமுடிகின்றது. தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதனடியில் பிள்ளையார் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம க்ஷத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கியும் இருந்ததாகவும் கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றது இதற்குச் சான்றாக இன்றும் இரசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்களும் மற்றும் சிற்பவேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர் அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

## 22.07.2022ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெறும்

## 12.08.2022ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5மணிக்கு எம்பெருமானுக்குரிய புண்ணிய தீர்த்தோற்சவம் நடைபெறும்



**விளம்பர அனுசரணையாளர் : சோமசுந்தரம் சுரேஸ் (முனைக்காடு)**

# உகந்தை மலை முருகன் ஆலய ஆடி வேல் விழா கொடியேற்றம்



( காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா கொடியேற்ற நிகழ்வு கடந்த 29ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை கோலாகலமாக இடம்பெற்றது. ஆலயபிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் சுமார் 6 ஆயிரம் அடியார்கள் சகிதம் சிறப்பாக நடைபெற்றது. உதவிக்குரு சிவசிறி கோபி சர்மா உதவினார். ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸ ாநாயக்க ஏற்பாட்டில் சரியாக காலை 11.20 மணியளவில் அரோகரா கோசம் விண்ணைப்பிளக்க கொடியேற்றம் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. தொடர்ச்சியாக13 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 11–ஆம் தேதி உகந்தைமலை சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம் பெறும். இது இவ்வாறு இருக்க கதிர்காமத்துக்கான காட்டுப்பாதையில் பயணிக்கும் பக்தர்கள் தொடர்ச்சியான மழையால் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இதுவரை 20ஆயிரம் அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்து இருக்கின்றார்கள்.

# எரிபொருள் பெற்றுத்தரக் கோரி கல்முனையில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



[அஸ்லம் எஸ்.மௌலானா]

கடற்றொழிலை தங்குதடையின்றி, கிரமமாக முன்னெடுப்பதற்கு போதியளவு எரிபொருளை பெற்றுத்தருமாறு கோரி கல்முனைப் பிரதேச ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாளர்கள் இன்று (31) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கல்முனை ஆழ்கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்முனை ஹுதா திடலை அண்மித்த கடற்கரைப் பகுதியில் சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம்.நஸீர் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான மீனவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தமது கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்திக்கொண்டு, கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபாட்டிருந்தனர். கடந்த பல மாதங்களாக நிலவி வருகின்ற எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கல்முனைப் பகுதியில் கடற்றொழில் வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் மீனவர்கள் வாழ்வாதாரம் இழந்து, நிர்க்கதியடைந்திருப்பதாகவும் கல்முனை மாநகர எல்லையினுள் 10 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருந்தும் கூட கடற்றொழிலுக்காக தங்களால் டீசலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும் மீனவர்கள் கவலை தெரிவித்தனர். கல்முனைப் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு தற்போது போதியளவு டீசல் வருகின்ற நிலையில், மீன்பிடிப் படகுகளுக்கென தங்களால் டீசலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் டீசல் விநியோகத்தின்போது தங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அதனை வழங்குமாறு கடற்றொழில் திணைக்களத்தின் உறுதிப்படுத்தலுடன் பிரதேச செயலாளரினால் சிபார்சுக் கடிதங்கள் வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும் எரிபொருள் நிலையங்களில் அதற்கு மதிப்பளிக்கப்படாமல், பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபடுகின்ற மாபியாக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது எனவும் இதன்போது அவர்கள் விசனமும் கண்டனமும் வெளியிட்டனர். இப்பிரச்சினைக்கு உடனடியாக தீவினைப் பெற்றுத்தருவதற்கு கடற்றொழில் அமைச்சரும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் அவசர நடவடிக்கை எடுக்க முன்வர என மீனவர்கள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர். அதேவேளை, மீனவர்களின் இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து, இப்பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கான முக்கிய கூட்டம் ஒன்று, இன்று ஸ்ரீ1பூ கல்முனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளரினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

# லெஜன்ஸ் விளையாட்டு கழகத்தின் ப்ளு நேவிஸ் சவால் கிண்ணம் ஆரம்பம்



[எம்.என்.எம்.அப்ராஸ்]

கல்முனை லெஜன்ஸ் விளையாட்டு கழகம் தனது 13வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வு20 கிரிக்கெட் ப்ளு நேவிஸ் சவால் கிண்ணம் சுற்றுப் போட்டி கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் ஆரம்பமானது குறித்த சுற்று தொடர் கிரிக்கெட் போட்டியில் இருபத்திநான்கு கழகங்கள் பங்கு பற்றுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தொடரின் முதல் போட்டி நிந்தவூர் முத்தகீன் மற்றும் மருதமுனை கோஸ்டல் வோரியஸ் அணிகளுக்கு கிடையில் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய கோஸ்டல் வோரியஸ் அணியினர் தனக்கு வழங்கப்பட்ட 20 ஓவர்களில் 126 ஓட்டங்களை பெற்றனர்.பதிலளித்தாடிய முத்தகீன் அணியினர் 18 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தனர். இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை ஹீனா ஜஜீவல்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஸி.எம். ஸஹீம் அவர்களும் அதிதிகளாக லெஜன்ஸ் விளையாட்டு கழக தலைவர் எம் எம் ஜமால் டீன், பிரதி தலைவர் கரீம் மற்றும் தவிசாளர் இனாம் மௌலானா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். பிரதம அதிதியின் கரத்தினால் போட்டியின் ஆட்ட நாயகன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# பஸ்ஸை மறித்து பழம் கேட்கும் யானை



[ காரைதீவு நிருபர் சகா]

கதிர்காமத்தில் இருந்து புத்தலை பாதைஊடாக பயணிக்கும் வாகனங்களை மறித்துத்து பழங்கள் கேட்கின்றது யானை. அந்த வகையில் நேற்று கதிர்காமத்தில் இருந்து சென்ற மட்டக்களப்பு பஸ்வை மறித்து யானை பழம் கேட்டது. பஸ்ஸுக்குள் இருந்தவர்கள் அதற்கு அன்னாசிப்பழம் வாழைப்பழம் போன்ற பழங்களை வழங்கியதும் அவற்றை உண்டு விட்டு அது வழியை விட்டு அகன்றது .அதன் பின்பு பஸ் சென்றது . இந்த செயற்பாடு தினமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் பக்தர்கள் யானை மீது வைத்திருந்த பயம் பீதி அகலஆரம்பித்துள்ளது. சிலர் அந்த யானையை தடவி வழிபடுகின்றனர். முருகனிடத்தில் அதாவது தம்பி இடத்தில் பெற்ற பழங்களை அண்ணனிடம் வழங்கிவிட்டு வருகின்றார்கள் என்று பலரும் பேசிக்கொண்டனர்.

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அதி நவீன கண் சத்திர சிகிச்சை செய்யும் உபகரணம் வழங்கிவைப்பு



[சம்மாந்துறை நிருபர்]

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை பிரிவின் வசதிகளை மேம்படுத்தும்வகையில் அதி நவீன கண் சத்திர சிகிச்சை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. சம்மாந்துறை பொதுமக்களின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை, மஜ்லிஷ் அஷ்ஷஜீரா, உலமா சபை என்ற முச்சபைகளின் வழிகாட்டலின் கீழ் பொதுமக்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 1கோடிக்கு மேற்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட கண் சத்திர சிகிச்சை உபகரணங்களை உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின்தலைவர் வைத்தியர் ஏ. இஸ்ஸடீன் தலைமையில் வைத்தியசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டு உபகரணத்தொகுதியை வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை பிரிவிற்கு உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் கிழக்குமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம். தௌபீக், கல்முனைப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம் றிபாஸ், பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அப்துல் வாஜித், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அஸாத் எம்ஹனிபா,முச்சபைகளின் பிரதிநிதிகள் உலமாக்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச சபைஉறுப்பினர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் உறுப்பினர்கள் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள்,தாதியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் பள்ளிவாசல் பிரதிநிதிகள் உள்ளிட்டபலர் கலந்துகொண்டனர்.

# லொறி விபத்து



தலவாக்கலை பி.கேதீஸ்

அட்டன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் நேற்று முன் தினம் காலை ஸ்ரீ0பூ லொறியொன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் லொறியின் சாரதியும் அதில் பயணித்த ஒருவரும் காயமடைந்த நிலையில் நுவரெலியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கால்நடைகளுக்கு தீவனத்தை ஏற்றிச் சென்ற லொறியொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# ஜனநாயக முறை மீறப்பட்டமையினால் தான் பிரபாகரன் போன்றோர் உருவாகினார்கள்




**பாறுக் ஷிஹான்**

வடக்கு ஆளுநரின் சர்வதிகார போக்கினை கண்டிப்பதுடன் உடனடியாக ஆளுநரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க பொது ஊழியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. சங்கத்தின் கல்முனை தலைமையகத்தில் சனிக்கிழமை ஸ்ரீ0பூ மாலை ஊடகவியலாளர் சந்திப்பு மேற்கொண்டு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது வட கிழக்கு மாகாணங்களின் 3 அமைச்சு செயலாளர்கள் அதிரடியாக கௌரவ ஆளுநரினால் இட சர்வதிகார போக்கில் மாற்றப்பட்டமை யாவரும் அறிந்ததே.இந்த இடமாற்றத்தை எமது தொழிற்சங்கமானது கண்டிக்கின்றது.ஆளுநர் தனது அதிகாரத்தை துஸ்பிரயோகத்தினால் அரச நிர்வாக நடைமுறையை குழப்புகின்றார். ஆளுநரை தட்டிக்கேட்பதற்கு ஆட்கள் இல்லை என்ற காரணத்தினால் தான் அமைச்சுக்களின் செயலாளர்களை தற்போது இடமாற்றியுள்ளார். நாங்கள் அமைதியாக இருப்பதனால் தான் ஆளுநரினால் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது தொழிற்சங்கத்தை பொறுத்தவரையில் வடகிழக்கில் இருந்த முன்னாள் ஆளுநர்களுடன் மோதி இருக்கின்றோம்.ஊழியர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அநீதி இழைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எமது தொழிற்சங்கமானது அதனை தட்டி கேட்டிருக்கின்றது.எமது தொழிற்சங்கமானது அமைதியாக உள்ளதாக தற்போதைய ஆளுநர்கள் நினைக்கின்றார்கள்.காலத்தின் தேவைக்கேற்ப தான் எமது தொழிற் சங்கமானது குரல் கொடுக்கும்.எனவே தான் வட கிழக்கில் சிறந்த முகாமைத்துவம் உள்ள ஆளுநர்கள் தான் தேவையாக உள்ளது என்பது தான் எமது தொழிற்சங்கத்தின் நோக்கம்.

வெளி இடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட ஆளுநர்கள் தான் வட கிழக்கு மாகாணத்தை நிர்வகித்தனர்.இவ்வாறு வெளியிடங்களில் இருந்து ஆளுநர்களை இறக்குமதி செய்வதனால் தான் சர்வதிகார போக்கு நிகழ்கின்றது.தற்போதைய ஆளுநர்களை உடனடியாக நீக்கி விட்டு வெளியிடங்களில் இருந்து ஆளுநர்களை நியமிக்காது வடகிழக்கினை சேர்ந்தவர்களை ஆளுநர்களாக நியமிக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றோம். எமது தொழிற்சங்கமானது வெளியிடங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆளுநர்களினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது.முன்னாள் ஆளுநர் ரோகித போகல்லாகம போன்றோர் சர்வதிகாரமாக எமது மாகாணத்தில் ஆட்சி செய்திருந்தனர்.நாங்கள் அவர்களுக்கு எதிராக குரல் கொடுத்தோம்.மாகாண சபை நிர்வாகத்தை நாம் சிறந்த முறையில் கொண்டு செல்ல வேண்டும்.மாகாண சபைகளுக்கு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் கூட மீள மத்திய அரசாங்கத்திடம் திரும்பி சென்றிருக்கின்றது.இதற்கு காரணம் இந்த மாகாணத்தை சேர்ந்த ஆளுநர்கள் சரியாக செயற்பட்டிருந்தால் வருகின்ற நிதியை சரியாக செலவு செய்திருப்பார்கள்.வட கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசியல்வாதிகள் கடந்த காலத்தின் ஆளுநர்களின் இச்செயற்பாடுகளை தட்டிக்கேட்கவில்லை.

அரசியல்வாதிகள் இத்தவறுகளை விட்டிருக்கின்றார்கள்.எமது தொழிற்சங்கத்தையும் மக்களை நித்திரை கொள்கின்ற சங்கம் என நினைக்கின்றார்கள். எமது உயிரை கூட துச்சமாக மதித்து கடந்த 32 வருடங்களாக வட கிழக்கு மாகாண ஊழியர்கள் உத்தியோகத்தர்களுக்காக நாம் போராடுகின்றோம் என்பதை மக்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.எமது உயிர் இருக்கும் வரை மக்களுக்காக எமது சேவையை வழங்குவோம்.இது அரசியல் நோக்கமல்ல மக்கள் சேவை மகேசன் சேவை என்பதே எமது நோக்கமாகும்.இந்த அடிப்படையில் தான் வடகிழக்கில் எமது தொழிற்சங்க செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளோம். பொலிஸ் காணி அதிகாரங்கள் வட கிழக்கு மாகாணங்களில் மறுக்கப்பட்டுள்ளதால் சிறந்த நிர்வாகத்தை மேற்கொள்ள முடியவில்லை.13 ஆவது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு அப்பால் சென்று இம்மாகாணத்திற்கு மாநில சுயாட்சியை பெற வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.இவ்வாறு செயற்படும் போது தான் இம்மாகாணங்களை அபிவிருத்தி செய்ய முடியும்.கடந்த 74 வருடங்களுக்கு முன்னர் விட்ட தவறுகளை புதிய அரசாங்கம் விட கூடாது.ஏனெனில் இந்த 74 வருடங்களாக அரசாங்கம் விட்ட தவறுகளினால் தான் பிரபாகரன் போன்றவர்கள் ஆயுதம் ஏந்தி போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

பிரபாகரன் என் ஆயுதம் ஏந்தி போராடினார் என்பதை சகலரும் உணர வேண்டும்.தமிழ் பேசும் எங்களுக்கு பல அநியாயங்கள் நடந்திருக்கின்றது. எங்களை நாங்கள் ஆளக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை.இவ்வாறாக ஜனநாயக முறை மீறப்பட்டமையினால் தான் பிரபாகரன் போன்றோர் உருவாகினார்கள்.அவரது போராட்டம் நியாயமான போராட்டமாகவும் மக்கள் போராட்டமாகவும் இருந்ததை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.வட கிழக்கினை ஆளக்கூடிய நிர்வாகக்கட்டமைப்பினை கேட்டுத்தான் அவர் போராடினார்.அவர் தனிப்பட்ட முறையில் எதுவும் கேட்கவில்லை. மக்களுக்காகவே அவர் போராடினார். வடகிழக்கு மக்களை ஆளுக்கூடிய நிர்வாகத்தை தாருங்கள் என பிரபாகரன் அண்ணன் கேட்டார்.அதில் என்ன தவறு உள்ளது.சேனநாயக்க முதல் கோத்தபாய வரையிலான ஆட்சியாளர்கள் விட்ட தவறினால் தான் சிறுபான்மை மக்கள் சின்னாபின்னமாகி உள்ளனர்.புதிய அரசாங்கமானது 74 வருடங்களாக விட்டிருந்த தவறுகளை விட வேண்டாம்.இன்று கூட சிங்கள மக்கள் இதனால் தான் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.தமிழ் மக்களின் கடந்த கால போராட்டம் நியாயமானது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள் ஊடகவியலாளர்களை அடக்கி ஆள பார்க்கின்றார்கள்.இவையெல்லாம் ஜனநாயக விரோதமான செயற்பாடுகளாகும்.எனவே தான் கடந்த கால தவறுகளை மறந்து தமிழ் முஸ்லீம் சிங்கள மக்கள் இனியாவது ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.என்றார்.




“வேண்டுவார் வினைதீர்க்கும் வேலவன் வீற்றிருக்கும் தாந்தாமலைப் பதியை தானாடிச் சென்றிடுங்கால் தொல்வினைகள் தீர்த்து துயரங்கள் அகன்று இன்பமுடன் வாழ்வார் உலகில்”

# தாந்தாமலை ஸ்ரீ முருகனுக்கு மகோற்சவப் பெருவிழா - 2022

| திருக்கொடியேற்றம் | தீர்த்தோற்சவம் |
|---|---|
| 22.07.2022 வெள்ளிக்கிழமை | 12.08.2022 வெள்ளிக்கிழமை |

விளம்பர அனுசரணையாளர் : முத்துலிங்கம் அருட்செல்வம் (மகிழடித்தீவு)

## கிழக்கு இளைஞர் அமைப்பினால் சாய்ந்தமருது பிரதேச செயலாளருக்கு கௌரவம்



**[எம்.எஸ்.எம்.ஸாகிர்]**

கிழக்கு இளைஞர் அமைப்பின் 4 ஆவது ஆண்டு மாநாடு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (30) சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. கிழக்கு இளைஞர் அமைப்பின் தலைவரும் முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான தானிஷ் ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இதன்போது பிரதேச செயலாளராக இருந்து சாய்ந்தமருது மண்ணுக்கு வேற்றுமைகள் பாராது தம் பணியை செவ்வனே செய்து அரும்பணியாற்றிவரும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக், அவரது சேவையைப் பாராட்டி, பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அத்தோடு, ஓய்வுபெற்ற அதிபரும்,சமூகசெயற்பாட்டாளரும் கிழக்கு இளைஞர் அமைப்பின் ஆலோசகருமான எம்.பி. அப்துல் ஹமீத், சாய்ந்தமருது அல்–ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யு.எல் நசார், நிந்தவூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.எஸ். ஜாரியா, இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோத்தர் ஏ.ஆர்.றிஸ்வானுல் ஜன்னாஹ் மற்றும் ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஸாகிர ஆகியோர் துறை சார்ந்து அவர்களது சேவையைப் பாராட்டி இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், புதிதாக இணைந்து கொண்ட இளைஞர், யுவதிகள் பலருக்கும் அங்கத்துவம் வழங்கப்பட்டதோடு, கல்விமான்கள், புத்திஜீவிகள், அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுநாள் வரை இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி பல்வேறு வகையான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஓர் அமைப்பாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு இளைஞர் அமைப்பின் பொதுச்செயலாளர் எம்.எம். முபாரக் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஏ.சாபீர், கிழக்கு இளைஞர் அமைப்பினது பிரதித் தலைவர் எஸ். எம். சம்சித், உதவித் தலைவர் எம்.எஸ்.ஏ. ஹர்பான், தொண்டர் ஒருங்கிணைப்பாளர் ஏ.ரீ. எம்.பைசின், பொருளாளர் ஆர்.எம். தன்சீம், தேசிய ஒருங்கிணைப்பாளர் ஏ. ஆர்.எப். சிரோனி, பிரதிச் செயலாளர் எம்.ஐ.எப்.சஜ்னா, உதவித் தலைவர் பி.நிலூ, பெண்கள் ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.எப்.றிஸ்னா, பணிப்பாளர் சபை உறுப்பினர் எஸ். சலீம், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்.எம்.எம்.மர்சூக் உட்பட அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## கொரோனா தொற்றுத் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்

### சாவகச்சேரி சுகாதாரப் பகுதி

**[சாவகச்சேரி நிருபர்]**

கொரோனா தொற்று தொடர்பில் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டுமென சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தென்மராட்சியின் சில கிராமங்களில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே சுகாதாரப் பகுதியினர் தென்மராட்சி மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.இது தொடர்பாக சுகாதாரப் பகுதியினர் கருத்துத் தெரிவிக்கையில், நீண்ட காலத்திற்குப் பின்னர் கைதடி,அல்லாரை,கொடிகாமம் கச்சாய் வீதி மற்றும் சாவகச்சேரி ஆகிய இடங்களில் புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.எனவே பொதுமக்கள் இதனால் ஏற்படக்கூடிய விபரீதங்களை முன்கூட்டியே உணர்ந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். பொது இடங்களில் மீண்டும் முகக்கவசத்தை அணிந்து சகலரையும் பாதுகாக்க வேண்டுமென மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

## கந்தளாயில் நாலாம் கட்ட கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பம்



**[எப்.முபாரக் ]**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொது சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதியில் நான்காம் கட்ட கொரோனா தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று நடைபெற்றன. இதன் போது பைசல் தடுப்பூசிகள் ஏற்றப்படுவதாக பிராந்திய சுகாதார வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார். தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் கந்தளாய் ஆயிஷா மகளீர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன் போது, பாடசாலை மாணவர்கள்,வயதானவர்கள், ஏற்கனவே கொரோனா தடுப்பூசி செலுத்தாவர்கள்,மற்றும் ஆண்கள்,பெண்கள் எனப் பலருக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. இதன் போது நூற்றுக்கும் மேற்பட்டோர் தடுப்பூசிகளை செலுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



“தா” என்றால் “இந்தா” என்று வழங்கும்
தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய
வருடாந்த மகோற்சவப் பெருவிழா 2022
திருக்கொடியேற்றம்
22.07.2022 வெள்ளிக்கிழமை
தீர்த்தோற்சவம்
12.08.2022 வெள்ளிக்கிழமை
அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக!
விளம்பர அனுசரணையாளர் : தாந்தியான் வேதநாயகம் (முனைக்காடு)